www.tamilarangam.net

# ஈழ விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பு

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை தற்போது பெரும் இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா அரசு ஈழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நோக்குடன் அரசப் படைகளினது சகல விதமான ஒடுக்கு முறை நடவடிக்கைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

ஈழத்தின் பிரதேசங்கள் அனைத்திலும் அரசப் படைகள் குவிக்கப் பட்டுள்ளனர்.

தற்போது ஸ்ரீலங்கா அரசின் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தினை ஒடுக்கும் பொருட்டு ஈழமக்கள் மீதான அரசநிர்வாகத்தினை அரசப் படைகளின் கையில் ஒப்படைத்திருக்கிறான்.

'பயங்கரவாதிகளை ஒழித்தல்' என்னும பெயரில் தமிழ் பேசும் மக்களை—குறிப்பாகத் தமிழ் இளைஞர்களை அழித்தொழிக்கும் பொருட்டு ஸ்ரீலங்கா அரசின் படைகள் எந்த விதக் கட்டுப்பாடுமற்ற முறையில் கைது செய்வதற்கும், சித்திரவதை செய்வதற்கும், கொலை செய்வதற்கும் அதிகார பூர்வமாக அனுமதிக்கப் பட்டுளளன.

ஸ்ரீலங்கா அரசின் இவ் இனப் படுகொலை நடவடிக்கைகளுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனைச் சார்ந்த நாடுகளும் பக்கபலமாக நின்று சகலவிதமான இராணுவப் பொருளாதார உதவிகளையும் செய்து வருகின்றன.

இவ்வாறான நிலைமைகளின் பின்னணியில் இனியும் தனித்தனியாக இயங்குவதை விடுத்து எமது எதிரியைத் தோற்கடிப்பதற்கும், பெரும் இக்கட்டான நிலையில் வாழும் எமது மக்களின் சுதந்திர உணர்வுகளை ஒருமுகப்படுத்துவதற்கும் சில அத்தியாவசிய நடவடிக்கைகளிலாவது நாம் இணைந்து செயற்பட வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்து தற்போது தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), ஈழப் புரட்சி அமைப்பு (EROS), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஆகிய மூன்று இயக்கங்களையும் சேர்ந்த நாம் ஒன்றுபட்டுச் செயற்படும் நிலையை உருவாக்கியுள்ளோம்.

(1) குறைந்தபட்ச வேலைத் திட்டங்களை உருவாக்குவதற்கான எமது அரசியல் ரீதியான அடிப்படைக் கொள்கைகள்:-

1. ஸ்ரீலங்காவின் ஆதிக்கத்திலிருந்து எமது தாயகத்தின் சுதந்திரத்தை வென்றெடுத்தல்.
2. ஈழ விடுதலை தவிர்ந்த வேறெந்த குறைந்தளவான சமரசத்துக்கும்இடமளிப்பதில்லை.
3. எமது மக்கள் அனைவரையும் இணைத்த ஆயுதப் போராட்டத்தை எமது போராட்டப் பாதையாகக் கொள்ளுதல்.
4. சுதந்திர ஈழத்தில் சோசலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.
5. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவ காலனித்துவப் பிடியிலிருந்து எமது தேசத்தை விடுவித்தல்.

(2) தற்போது ஒப்புக் கொள்ளப் பட்டுள்ள குறைந்தபட்ச வேலைத் திட்டங்கள்:

1. ஸ்ரீலங்கா அரச படைகளுக்கு எதிரான எமது ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை ஒருமுகப் படுத்தி செயற்படுத்துதல்.
2. வெளிநாடுகளில் பிரச்சாரங்களைக் கூட்டாக மேற் கொள்ளுதல்.
3. எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான தனிநபர்களிடமிருந்தும் நிறுவனங்களிட மிருந்தும் பொது நிதியைத் திரட்டி அதனை ஒரு பொதுக் குழு மூலம் நிர்வகித்தல்.

இத்துடன், இக்கூட்டமைப்பு மேலும் விரிவுபட்டு வலுப் பெற எமது மக்களின் விடுதலைக்காகப் போராடும் ஏனைய இயக்கங்களையும் இக்கூட்டமைப்பில் இணைந்து செயற்பட வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்துகிறோம். இதற்கு ஏனைய அனைத்து இயக்கங்களையும் ஒத்துழைப்புத் தருமாறு வேண்டுகோள் விடுகின்றோம்.

| | | |
|---|---|---|
| செயலதிபர் | செயலதிபர் | செயலதிபர் |
| தமிழீழ விடுதலை இயக்கம். | ஈழப்புரட்சி அமைப்பு | ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி. |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்